SPECIAL ENGLISH
பயிற்சிக்கான
விரிவுரைகள்
அச்சடித்த பாடக் குறிப்புடன்
கடந்த கால
வினாத்தாள்களுடன்
நடாத்தப்படும்.
புதிய ஆங்கில கல்வி
நிலையம்
82, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விசேட ஆங்கிலம்
G.A.Q., N.C.E.
SPOKEN ENGLISH
G.C.E [O/L] G.C.E.[A/L]
ஆகிய வகுப்புகள் ஆரம்பம்
09 – 04 – 1994
புதிய
ஆங்கில கல்வி
நிலையம்
ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.
(30250)

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 25 வியாழக்கிழமை (07 – 04 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 131

# பிரேமதாசாவின் கொள்கைகளை அரசு மீண்டும் கைக்கொள்ளும்?

## தேர்தல்களில் வெல்ல இப்படி ஒரு முயற்சியில் அமைச்சர்கள்

கொழும்பு, ஏப்ரல் 7

விஜேதுங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளுக்குத் திரும்ப உத்தேசித்துள்ளதாகவும் —

பிரேமதாசாவின் முக்கிய கொள்கைளை மீண்டும் செயற்படுத்துவது குறித்து எதிர்வரும் மே தினத்தில் மக்களுக்கு அறிவிக்க அமைச்சர்கள் தீர்மானித்துள்ளதாகவும் —

பி. பி. ஸி. தனது கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

தென்மாகாண சபைத் தேர்தல் தோல்வியை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி அரசு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளுக்குத் திரும்புகின்றது. மேதினப் பேரணிகளை அரசு ரத்துச் செய்துள்ளது அதற்கான அறிகுறிய —

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாமன்றத் தேர்தல்களில் ஆளும் கட்சி தோல்வி அடையக் கூடும் என்ற கவலைக்கு மத்தியில் அரசின் இந்த நடவடிக்கை அமைகின்றது. —

இதேவேளை —

பாடசாலை மாணவருக்கு இலவச சீருடைகளை அடுத்த மாதம் வழங்கப் போவதாகவும் அரசு அறிவித்துள்ளது.

மேதினப் பேரணி ரத்தும், இலவச சீருடை வழங்கலும் ஒன்றோடு ஒன்று தொடர்பு அற்றதாகத் தோன்றும் —

ஆனால் ஆளும் கட்சி, பிரேமதாசாவிற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு ஏற்படுத்திய கொள்கைகளுக்கு திடீர் என்று திரும்புகிறது என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுகின்றன.

விஜேதுங்காவின் தலைமை பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கவலை எழுந்துள்ள வேளையில், கைவிடப்பட்ட பிரேமதாசாவின் கொள்கைகளை மீண்டும் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று பிரேமாவின் விசுவாசிகள் கோரி வருகின்றனர். —

கட்சிக்குள் நடந்த பல முக்கிய கூட்டங்களைத் தொடர்ந்து, பிரேமாவின் கொள்கைகள் மீண்டும் செயற்படுத்தப்படும் என்ற தகவலை அறிவிக்க மேதினத்தைப் பயன்படுத்த அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர் — என்று அந்த கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மே தின பேரணி ரத்து

கொழும்பு, ஏப். 7

வழக்கம்போல் நடத்தும் மேதினப் பேரணிகளை இம்முறை நடத்துவதில்லை என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு மேதினப் பேரணியில் கலந்து கொண்ட போது படுகொலையுண்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மரியாதை செலுத்துமுகமாக இம்முடிவை அமைச்சர்கள் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு மேதினக் கொண்டாட்டங்களுக்குப் பதிலாக நாடெங்கிலும் பிரேமதாஸாவுக்கு அஞ்சலி செய்யும் கொண்டாட்டங்கள் நடைபெறும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## செல்லச்சாமி ஆதரவு உறுப்பினர் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 7

அமைச்சர் தொண்டமானின் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் நாம் மலையக மக்கள் முன்னணியில் சேர்ந்து கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியின் ஆதரவாளர்களான மத்திய மாகாண சபையில் உள்ள எட்டு உறுப்பினர்களும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தினர்.

இந்த எட்டுப்பேரும் நேற்றுக்காலை நாடாளுமன்ற அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசியபோதே முன்கண்ட எச்சரிக்கை விடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-6)

## நரோமா கப்பல் இன்று வருகிறது

யாழ்ப்பாணம், ஏப். 7

திருகோணமலையில் இருந்து ஒருதொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு 'நரோமா' கப்பல் இன்று காலை காங்கேசன் துறைக்கு வரவிருக்கின்றது.

இக்கப்பல் கொழும்பு செல்லும் ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்று மாலையே திருகோணமலைக்கு திரும்பும் என்றும்—

இக்கப்பலில் செல்வதற்காக செயலகத்தில் பெயர் பதிந்தவர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன் பருத்தித்துறையில் சமூகமளிக்குமாறும் — யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. நிகைநாயகம்போல் கேட்டுள்ளார்.

அதேவேளை— கொழும்பில் சிகிச்சை பெறச்சென்றவர்களில் ஒருதொகுதியினரை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்பாட்டில்— 'பிளாம்பயான்' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

கொழும்பில் சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்களுடன் இன்று மாலையே அக்கப்பல் திருகோணமலைக்கு செல்லும். [இ-173-17-3]

சிறப்பாகத் தேறிய

## மாணவருக்கு நாளை தலைவரின் பரிசுகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கடந்த வருடம் நடத்திய தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுச் சிறப்பாகத் தேறிய மாணவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு —

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கும் பணப்பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும் —

கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் வழங்கும் சான்றிதழ்கள், பதக்கங்கள், பரிசுகளும் —

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில், நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் பரிசளிப்புவிழாவில் வழங்கப்படும்.

பரிசளிப்பு விழாவுக்கு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம், கல்விப் பணிப்பாளர் செல்வி திலகதி பெரியதம்பி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. ஆர். என். நடராஜா. கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் திருமதி சி. இராமநாதன் ஆகியோர் விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், தமிழீழ உதவி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

(அ)

## கோமாரி வருகை தாமதம்

யாழ்ப்பாணம், ஏப். 7

கொழும்பில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக ''கோமாரி'' கப்பல் வடக்கே புறப்படுவது தாமதமாவதாக யாழ். அரச அதிபர் செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

மழை காரணமாக கோமாரி கப்பல் இன்று தான் கொழும்பில் இருந்து புறப்பட உள்ளது.

[இ-173 3]

### பரீட்சை பெறுபேறுகள்

★ ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளின் முடிவுகள் நாளைய உதயனில் வெளியிடப்படும்.

★ தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தேசிய, 3 கோட்ட மட்டங்களில் அதிக புள்ளிகளைப் பெற்று தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் பணப்பரிசுகளை பெறுவோரின் விவரமும் நாளைய உதயனில் வெளிவரும்.

### வீரச்சாவு

கட்டுவன், இடைக்காடுப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் பெருவழகன் அல்லது வில்லியம் [கனகசபாபதி ஸ்ரீதரன் – மட்டக்களப்பு] என்பவர் வீரச்சாவடைந்தார்.

இவரது வித்துடல் இன்று நல்லூர் செட்டித் தெருவில் உள்ள அவரது தற்போதைய இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு வண்ணார்பண்ணை வள்ளுவன் ச.ச. நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

பின்னர் இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் அவரது வித்துடல் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

## ஐ.தே.க.வுக்கு ஆதரவளிக்க தொண்டமான் நிபந்தனை

கொழும்பு, ஏப். 7

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்க அமைச்சர் தொண்டமான் நிபந்தனை விதித்துள்ளார் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தம்மைச் சந்தித்துப் பேசிய சிரேஷ்ட அமைச்சர்களிடம் தொண்டமான் இந்நிபந்தனைகளைத் தெரிவித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

அந்த நிபந்தனைகள் வருமாறு:-

✶ மத்திய மாகாண அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட திரு. சதாசிவம் மீண்டும் அதே பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

★ ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக நடந்து கொண்டதற்காக ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட எட்டு மாகாணசபை உறுப்பினர்களின் இடங்களுக்குப் புதியவர்களை இ.தொ.கா. நியமிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

(இ-எ-6)

# மாத்தளை மாநகர மேயர் உட்பட 6 ஐ.தே.க உறுப்பினர் ராஜினாமா

கொழும்பு, ஏப். 7

மாத்தளை மாநகர சபை மேஜர் ரஞ்சித் அலுவிஹார உட்பட ஆறு மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று ராஜினாமாச் செய்துவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

### உட்பூசலே காரணமாம்

தங்கள் பதவி விலகல் கடிதங்களை இவர்கள் நேற்று ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயிடம் சமர்ப்பித்தனர்.

பதவி விலகிய மேஜர் ரஞ்சித் அலுவிகார, துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சரான அலிக் அலுவிஹாரையின் புதல்வர் ஆவார்.

மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவும் பூசலே இவர்களின் ராஜினாமாவுக்குக் காரணம் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கண்டிப்பது, ஐக்கிய தேசியக் கட்சியை நேரடியாகப் பாதிக்கின்றது. இதனை கட்சித் தலைமைப்பீடம் உணராமையே தென் மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குக் காரணமாகும் என்று பதவி விலகிய மேஜர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

(இ-எ-6)

## பிரேமதாசா மகனுக்கு அரசில் சேர அழைப்பு

கொழும்பு, ஏப் 7

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித்தை அரசாங்கத்தில் சேரும்படி உபசபாநாயகர் காமினி பொன்சேகா அழைத்திருக்கிறார்.

தென்மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சஜித்தை, பொன்சேகா சந்தித்து இவ்வழைப்பை நேரில் விடுத்தார்.

சஜித் அவ்வழைப்புப் பற்றி கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும்—

எந்த அழைப்பும் தமது தாயாருக்கும் சேர்த்தே விடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த பொதுத் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடுவதற்குச் சிறந்த வேட்பாளர் தமது தாயார் என்று சஜித் நம்புகின்றார். அம்பாந்தோட்டையில் போட்டியிடுவதையே சஜித் விரும்புவதாகவும் 'சண்டேரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது. [இ-எ]

### முச்சந்தி முரளி



அப்ப கருதியை போகினம் என்று சொல்லுங்கோ......!

ராமதாஸ் கைதானதை அடுத்து

## தமிழ்நாட்டில் வன்முறைகள் பஸ் தீ வைப்பில் இருவர் பலி

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ் கடந்த திங்கட்கிழமை மதுரையில் கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து செவ்வாய்க்கிழமை இரவு வேலூருக்கு அருகில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பஸ் ஒன்று தீ வைக்கப்பட்டது. இச்சம்பவத்தின்போது பஸ்ஸில் இருந்தவர்களில் இருவர் எரிந்து மரணமாகினர். 24 பேர் காயம் அடைந்தனர்.

அரச போக்குவரத்துக்கழக பஸ் ஒன்றே வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு உள்ளானது.

வன்முறைக் கும்பல், பஸ்ஸை நோக்கி தீப்பந்தங்களை வீசியதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

### அ.தி.மு.க உறுப்பினர் பாய்ந்து தப்பினார்

சென்னை, ஏப். 7

பாட்டாளி மக்கள் கட்சித்தொண்டர்களால் தாக்கப்பட்டு எரியுண்ட பஸ்ஸில் அ.தி.மு.க எம். எல். ஏ. தர்மலிங்கமும் பயணம் செய்தார் என்றும்—

அந்த பஸ்ஸில் இருந்து குதித்து அவர் உயிர் தப்பினார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எனினும், அவர் உடலில் பல இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## அஷ்ரப் ராஜினாமா ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 7

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்வதை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். [illegible] ராஜினாமாச் செய்த பின்னர் தமது இடத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் சார்பில் எம் பியாக நியமிக்கப்படுபவர் யார் என்பது தொடர்பாக, முஸ்லீம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாப் அஷ்ரப்பின் பெயருக்கு அடுத்ததாக சேகு இஸ்ஸதீன் என்பவரின் பெயரே முஸ்லீம் காங்கிரசின் வேட்பாளர் பட்டியலில் உள்ளது.

ஆனால் சேகு இஸ்ஸதீன் முஸ்லீம் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்.

ஆகவே அவரது பெயரை வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கிவிடும்படி முஸ்லீம் காங்கிரஸ் செய்த விண்ணப்பத்தை தேர்தல் ஆணையாளர் நிராகரித்து விட்டார்.

இதனை ஆட்சேபித்து முஸ்லீம் காங்கிரஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

(இ-எ-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு இலிகிதர், அச்சக முகாமையாளர் தேவை. நற்சான்றிதழ்களுடன் அணுகவும். 935, மே/பா, உதயன். (சி-7475)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு நாள் புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, முதலாம் கட்டை, பிரதான வீதி, பருத்தித்துறை. (30239)

தடுப்பூசி போட்ட 6 மாத Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30255)

### PAST PAPER

பொருளியல் 30/- (A. சண்முகலிங்கம்) வர்த்தகமும் நிதியும் 30/- (E. செல்வநாயகம்) கணக்கியல் 1991-92-93 (92, 93 Special) 125/- (A. சண்முகலிங்கம்) விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7472)

### தவறிவிட்டது

4-4-94 அன்று காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் எனது சமஸ்கிருத புத்தகப் பை ஒன்றை தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் திருவள்ளுவர் அச்சகம், நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (30262)

### வாழ்த்து மடல்கள்

பிறந்த நாள் வாழ்த்து மடல் தொகையாகவும், சில்லறை விலைக்கும் மற்றும் திருமண வாழ்த்து அடிப்பதற்கும் தொகையாக பெறுவதற்கு மக்மில்லன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம், நல்லூர். (சி-7477)

### ஆனந்தம் சீயாக்காய்

சித்த மருத்துவ ஆலோசனையின்படி தயாரிக்கப்பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் கிடைக்குமிடம்: தென்மராட்சி சகல வர்த்தக நிலையங்கள், யாழ்ப்பாணம் குகன் களஞ்சியம், அம்பாள் களஞ்சியம், மு. சச்சிதானந்தம், வியாபாரி மூலை, செட்டி கடை, கொழும்புத்துறை. (7181)

### உடன் விற்பனை

புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (30254)

### உடன் தேவை

யாழ். நகர சுற்றாடலில் [இரு மைல்களுக்குள்] சிறிய குடும்பத்திற்கு தனி வீடு அல்லது அனெக்ஸ் தேவை. தொடர்பு: விக்னா கல்வி நிறுவனம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7478)

---

ஈவ்லின் இரத்தினம்
பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

## கருத்தரங்கு

பெண்கல்வியும் வறுமையும்
— வளர்முக நாடுகளின் அனுபவம்

உரைவழங்குபவர்.

**மா. சின்னத்தம்பி எம். ஏ.**
(விரிவுரையாளர் கல்வியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

இக்கருத்தரங்கு 07-04-94 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நிறுவனத்தின் நூலக மண்டபத்தில்

**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**
(சிறப்பாய்வாளர், கக்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்)
அவர்களின் தலைமையில் நடைபெறும்.

எஸ், சிவலிங்கராஜா
இயக்குநர்.

(சி/7683)

---

## விசேட மலிவு விற்பனை

ரவுசர் (நீளக்காற் சட்டை)
அளவு: 28, 30, 32, 34
விலை 200/-
(சொற்ப கையிருப்பே உண்டு)

## லிங்கம்ஸ் சில்க் கவுஸ்

நவீன சந்தை, யாழ்ப்பாணம். [7185]

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் : | மறைவு : |
|---|---|
| 28 — 07 — 1969 | 22 — 02 — 1994 |

## செல்வன் நாகலிங்கம் சிவநேசன்

எங்கள் அன்பிற்கும், பண்பிற்கும் உரித்தான சிவா! நீ எங்களைவிட்டுப் பிரிந்து இன்றுடன் 45 நாட்கள் ஓடிவிட்டன. நீ எங்களுடன் படிக்கும் போதும் பின்னர் பாடசாலையை விட்டு வெளிவந்த பின்னரும் எங்களுடன் தோளோடுதோள் நின்று எல்லா வகையிலும் பழகுவதற்கு இனிமையாகவும் பொதுச் சேவையில் தொண்டனாகவும் இருந்து எங்கள் எல்லோரது இதயங்களிலும் நிறைந்த ஆருயிர் நண்பா!

நீ இவ்வளவு விரைவில் எங்களை விட்டு செல்வாய் என்று நாங்கள் ஒரு போதும் நினைத்திருக்கவில்லை. அத்துடன் இறுதி ஊர்வலத்திலாவது உனது திருமுகத்தைப் பார்க்க முடியாமல் போனது எங்களுக்கு பேரிடியாய் உள்ளது நண்பா!

ஆண்டுகள் பல ஓடிமொழிந்தாலும் உன் நினைவுகளும், உன் பண்புகளும் எங்களை விட்டு அகலாது.

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகிறோம்.

சாந்தி!

செவிப்புலன் வலுவற்றோர்
புனர்வாழ்வு நிறுவனம்
உறுப்பினர்கள்.

(30266)

---

# ARE THESE YOUR NEEDS?

From this year the Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation has expanded their activities in a large scale

(1) Surveys regarding a Village for those interested in the development of this Village.
(2) Surveys on a particular social section.
(3) Surveys on consumer satisfaction on a particular product.

Could be provided with consultancy service for undertaking such surveys, or could under take a complete survey and provide you a survey report The Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation with consultants who have many years of experience in this field are now available for such services. In addition, we supply required statistics for

Research personnels for writting research reports University students

School Teachers, Students and Others

We are also in a position to prepare and provide survey reports on required subject to Government and Non-Government Social Service Organisations.

For further information
Please contact:
STATISTICS BRANCH,
**TAMIL EELAM ECONOMIC DEVELOPMENT ORGANISATION THAVADY.**

(C-7697)

---

தாய்மார்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
பளிச்சிடும் வெண்மைக்கு

## றோயல் நீலம்

கடைகளில் விற்பனையாகும் நீலப் பக்கெட்டுகளைப் போல, போலி நீலம் இல்லையென தமிழீழத்தில் உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது.

100 ஆடைகளுக்கு ஒரு பக்கெட் போதுமானது: றோயல் நீலம் ஒரு பக்கெட் 6/50 மட்டுமே.

றோயல் இன்டஸ்றிஸ்,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

[சி-7692]

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்,

## A/L 1996
## கலை, வர்த்தகம்

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| அளவையியல் | — திரு. எஸ். எஸ். மனோகரன் |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | — திரு. சோதி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| புவியியல் | — திரு. வேலா |
| நாடகமும், அரங்கும் | — திரு. சத்தியா |

**ஆரம்பம்: 09-04-1994**
ஞாயிறு

குறிப்பு:
குறிப்பிட்ட 200 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என்பதால் அனுமதியினை உடன் உறுதிப்படுத்தவும்.

- நிர்வாகி.

[இ-7689]

---

## காரியம் கைகூடும்

கடம்பனை கவின் நீர்வைக்கந்தனை
நடம் பயில் மயில்வாகனனை - தினம்
திடம் கொண்டு தொழுவார்
தொடும் காரியம் யாவும் கைகூடுமே

— "நீர்வை இரதி"

07 - 04 - 94 நீர்வைக் கந்தன் கொடியேற்றம்.

(30233)

---

யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்ட

## அறிவித்தல்

09-04-1994 சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

- செயலாளர்

பாடசாலை அபிவிருத்திச்சபை,

(7186)

---

## COMPUTER கல்வி

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE**
(4 MONTHS)

செவ்வாய், வியாழன் 10-30 — 12-30

**ஆரம்பம்: 12-04-1994**
Fees மாதம் 400/-

**LOTUS 1-2-3**
(With Macro)
2 MONTHS

செவ்வாய், வியாழன் 2-30 — 4-00

**ஆரம்பம்: 14-04-1994**
Fees மாதம் 1000/-

★ முதல் அறிமுக வகுப்பு இலவசம்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ தமிழிலும் விளக்கங்கள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

Lectures by:
S. P. SIVAPATHASUNDARAM
M I D P, M. (Lond)

**C.I.M.A., I.A.B., SHORT - HAND & TYPING நடைபெறுகின்றன**

உறுதியான கல்வியைப் பெற:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3RD CROSS STREET,
JAFFNA.

(சி-7702)

---

யாழ் நகரிலிருந்து மிக விரைவில்

## புதினம்

பல்சுவைக் கிழமை இதழ்
எல்லோரும் விரும்பிப் படிக்கக் கூடிய புதிய சஞ்சிகை

**விற்பனையாளர்களே!**

எமது பிரதிநிதி இவ் வாரத்தில் உங்களை நேரில் சந்திப்பார். 12 - 04 - 1994 க்கு முன் அப்படி அவர் சந்திக்காவிடின் உடனே நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: புதினம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம்.

[சி-7479]

---

## 96 A/L
## கணித - விஞ்ஞான வகுப்புக்கள்

### NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

**ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| இரசாயனவியல் | — சிவசுப்பிரமணியம் B. Sc. (Hons) |
| பௌதீகவியல் | — S. சோதிலிங்கம் B. Sc. (Special) |
| தாவரவியல் | — V. S. குணசீலன் B. Sc. (Special) |
| விலங்கியல் | — தம்பிராஜா B. Sc. (Hons) Dip-in-Ed. |
| தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் B. Sc. Dip-in-Ed. |

### NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| இரசாயனவியல் | — A. மகாதேவா B. Sc. (Hons) Dip-in-Ed |
| பௌதீகவியல் | — S. J. கணேசன் B. S (Eng) |
| தாவரவியல் | — V. S. குணசீலன் B. Sc. (Special) |
| விலங்கியல் | — சண்முகநாதன் B. Sc. (Hons) |
| தூய/பிரயோக கணிதம் | — P. வெக்டர் வேலாயுதம் B. Sc. (Hons) |

**புதிய வகுப்புக்கள் 09 - 04 - 1994 (சனி) முதல் ஆரம்பமாகவுள்ளன**

விண்ணப்பங்கள் யாவும் **08 - 04 - 1994** (வெள்ளி) வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்

[இ-7698]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதியின் சீன விஜயம்

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா அடுத்த மாதம் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார். அவரது பயணத்துக்கான திகதிகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டுக்கு அரச முறைப் பயணம் செய்வது ஒன்றும் புதியது அல்ல. சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளுக்கும் இடையேயான நட்பையும், உறவுகளையும் வளர்க்கவும், பரஸ்பர முன்னேற்றத்துக்கு வழி செய்யவும் இத்தகைய பயணங்கள் பெரிதும் உதவுகின்றன.

ஆனால் ஜனாதிபதி விஜேதுங்காவின் சீன விஜயத்தை வழமையான, சாதாரணமான பயணம் என்ற வரையறைக்குள் வைத்துப் பார்க்க முடியாது. அவர் பொருளாதார, அரசியல் உறவுகள் மற்றும் அனைத்துலக விவகாரங்கள் சம்பந்தமான பேச்சுக்களை நடத்துவதற்காகவோ அல்லது நட்பைப் பேணுவதற்காகவோ மட்டுமோ சீனா செல்லவில்லை.

மிகமிகக் குறிப்பாக விசேடமாக இராணுவ உதவிகள் குறித்துப் பேசுவதற்காகவே செல்கிறார் என்பது பரம இரகசியம். அதுவும் தமிழர்களுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தி, அவர்களை வெல்லும் நோக்குடன் — அழிக்கும் நோக்குடன் — சீனாவிடம் இருந்து மலிவு விலையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாகப் பேசுவதே விஜேதுங்காவின் சீனப் பயணத்தின் முக்கிய நோக்கம்.

நாட்டின் மிக முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினையை அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரும் எண்ணம் விஜேதுங்காவுக்கு இன்னும் உதிக்கவில்லை என்பதனையே அவரது சீன விஜயம் உறுதி செய்கிறது. தென் மாகாண சபைத் தேர்தல் பெறுபேறுகளின் — ஐக்கிய தேசியக் கட்சி அரவணைத்த தோல்வியின் — பின்னரும் அவர் தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை, பாருங்களேன்!

முதலாவது உத்தியோகபூர்வ பயணம் என்ற போர்வையில் தாமே நேரில் சென்று சீனாவிடம் ஆயுதங்களை வாங்குவதற்கு முடிவு செய்திருப்பது, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதில் அவர் எவ்வளவு அதிக அக்கறை கொண்டிருக்கிறார் என்பதனைப் புலப்படுத்துகிறது அல்லவா?

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மதவின் யாழ்ப்பாணப் பயணத்தை இறுதி நேரத்தில், பொருந்தாக் காரணம் கூறித் தடுத்ததும் யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்காகவே என்பது எவ்வித மாசு மறுவும் இன்றி நிரூபணமாகி உள்ளது!

ஸ்ரீலங்காவுக்கும் சீனாவுக்கும் ஆண்டாண்டு காலமாக நல்லுறவும், பொருளாதார வர்த்தக உறவுகளும் சீராகவே இருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள இச்சந்தர்ப்பத்தில் அவசரப்பட்டு ஸ்ரீலங்கா ஜனாதிபதி அங்கு செல்வதற்கு அப்படி ஒரு பொதுவான தேவையும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயுதக் கொள்வனவுக்கான பேச்சை, பேரம் பேசுவதைத் தவிர!

சிலவேளை இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாட்டு சமாதான முயற்சிகளை தடுப்பதற்கு சீனாவின் ஆதரவை உத்தியோகபூர்வமாகப் பெறுவதும், விஜேதுங்காவின் சீன விஜயத்தின் மேலதிக நோக்கமாக இருக்கலாம். எந்தக் கட்டத்திலும் வெளிநாட்டுச் சமரசம் இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தேவையில்லை என்று சீன உதவிப் பிரதமர் கொழும்பில் முன்னர் கூறியது அதற்கான கட்டியமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது!

# செட்டிகுளம் பிரதேச செயலர் பணிமனையில் பண மோசடி

திருகோணமலை, ஏப். 7

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பணிமனையில் 9 லட்சம் ரூபா மோசடி ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண சபை உள்ளகக் கணக்குப் பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச செயலரும் மேலதிக அரச அதிபருமான செல்வி டெலிட் திருநாவுக்கரசு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார் என அறிய வருகிறது.

சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் இல்லாத ஆட்களுக்கு மோசடியான முறையில் பொதுமக்கள் உதவி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து சென்ற பிரதான கணக்குப் பரிசோதகர் திரு. கே. பாலசுப்பிரமணியம் மற்றும் திரு. கதிர்காமநாதன், திரு. துரைராசா ஆகியோரைக் கொண்ட உள்ளகக் கணக்குப் பரிசோதகர்கள் இந்த விடயத்தை மேற்கொண்டு ஆராய்ந்து வருகிறார்கள். (௧)

## மன்னாரில் பகலில் மட்டும் மீன்பிடிக்க அனுமதி!

கொழும்பு, ஏப். 7

மன்னாரில் கடற் பிராந்தியத்தில் பகலில் மட்டும் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் செயலகத்தில் நடந்தகூட்டம் ஒன்றில் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேர்ணல் ஏ. லங்காதேவ மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இரவில் மீனவர் தொழிலுக்கு செல்வது தற்போதைய சூழ்நிலையில் அபாயகரமானது என்றும் அவர் கூறினார்.

தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகளும், திணைக்கள பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## மின்னொளி உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 7

ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சிக்காக 'ராசி சிக்ஸ்' மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று 7ஆம் திகதி பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

சென்மேரிஸ், விநாயகர், பாடும்மீன், அம்பாள்- சென். அன்ரனிஸ், டைமன்ட், ஞானமுருகன், கலைகலைக்கழகம் ஆகிய 8 அணிகள் இதில் பங்கு பற்றுகின்றன.

போட்டிகள் தினமும் பிற்பகல் 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

7ஆம், 8ஆம், 9ஆம் 11 ஆம் 12ஆம், 13ஆம், 14ஆம் 15ஆம், 16ஆம் 18ஆம் திகதிகளில் போட்டிகள் நடைபெறும்.

## சீன உதவியுடன் பீரங்கி படகு இலங்கையில் கட்டப்படும்!

கொழும்பு, ஏப். 7

சீன அரச உதவியுடன் எதிர்காலத்தில் இலங்கையில் விரைவில் பீரங்கிப் படகுகள் நிர்மாணிக்கப் படக்கூடிய நிலை ஏற்படலாம்.

இலங்கை கடற்படை அதிகாரிகளை மேற்கோள் காட்டி தஐலண்ட் நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

நான்கு போர்க் கப்பல்களை வாங்குவதற்கான உடன்பாடு ஒன்று இரு நாடுகளுக்கும் இடையே அண்மையில் கைச்சாத்திடப்பட்டதை அடுத்து இலங்கைக் கடற்படை அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இலங்கை தனது இராணுவ ஆயுதத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள சீனாவின் ஆதரவு தேவை என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரண்டு தசாப்தங்களாக சீனா இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்து வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (த-எ)

## மே தின முன்னோடி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 7

மே நாள் ஏற்பாட்டுக்கான முன்னோடிக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறை பணிமனையில் நடைபெறும். அனைத்து அரச, கூட்டுறவு, தனியார்துறை தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளையும் துறைசார் சங்கங்களின் பிரதிநிதிகளையும் கருத்தரங்கில் கலந்து கொள்ளும்படி யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (த)

## பேச்சு, பாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 7

தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுமுகமாக காரை சிறுவர்களுக்கு பேச்சுப் பாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க)

## அன்னை பூபதி நினைவு சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக இன்று மிருசுவில் உமைநேசன் சனசமூக நிலையம் துப்பரவு செய்யப்படும். [க]

## தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசை விழாவில் இன்று திரு. சி. தில்லைமணி, திருமதி சக்திதேவி சிவகுமார் ஆகியோரின் பாட்டு நிகழ்ச்சி இடம்பெறும். (க-111)

## புலிகளின் குரல் வானொலியில்

07-04-1994

வியாழன் இரவு

★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "உயிர்கொடுத்த உத்தமி"

★ 8-10 — உரை - "நிலநடுக்கம் ஏன் இவ்வாறு உண்டாகிறது"

★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் "கோழிக்கும் ஊசியா" குறுநாடகம்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — உலக சுகாதார தின நினைவாக சிறப்பு நிகழ்ச்சி

★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

08-04-1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்

★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "அணையாத தீபம் அன்னை பூபதி"

★ 7-25 — விடுதலை கானங்கள்

★ 7-45 — செய்திகள்

★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-55 — தாயகப் பாடல் என்பன இடம்பெறும்.

# உடல் ஆரோக்கியம் பெற்று வாழ்வதற்கு வாய்ச் சுகாதாரம் பேணுவது அவசியம்

இன்று (7-4-1994) உலகசுகாதார தினமாகும் 'வாய்ச்சுகாதாரம்' தொனிப்பொருளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களிடையே 'பல், முரசுவியாதி' ஒரு சமூகப் பிரச்சினையாக உள்ளது.

இது குறித்த மக்களை விழிப்படையச் செய்யும் நோக்குடன் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மனிதனின் நல்வாழ்விற்கு வாய்ச்சுகாதாரம் வகிக்கும் முக்கியத்துவத்தை இவை உணர்த்துகிறது. உயிர்வாழ்விற்கு அவசியமான உணவை உட்கொள்ளுவதற்கு வாய் அவசியம். 'பல்லுப்போனால் சொல்லுப் போய்விடும்' என்ற முதுமொழிக்கேற்ப மனிதனின் முக்கிய தொடர்பு சாதனமாகவும், தோற்றப் பொலிவும், தன்னம்பிக்கையும் மேம்படுத்தும் அங்கமாகவும் பற்களும் வாயும் அமைகிறது. எனவே வாய் நலம் பேணுதல் 'சுகவாழ்வு' என்ற நிலைக்கு அவசியமாகிறது.

எமது பிராந்தியத்தில் வைத்தியசாலைகளில் உள்ள பற்சிகிச்சை நிலையங்களில் பரிகாரம் செய்ய வருபவர்களில் 70% பேர் பற்களை இழக்கும் நிலையிலேயே வருகிறார்கள். வாயில் ஏற்படும் நோய்களை ஆராயும்போது — அதிர்ஷ்டவசமாக பெரும்பாலான நோய்களை மிக எளிமையாக ஒவ்வொருவரும் தானே தனக்கு மேற்கொள்ளக்கூடிய பொருளாதார நன்மையுடையதுமான செயல்கள் மூலம் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

வாய் நோய் சம்பந்தமான உலகளாவிய புள்ளிவிவரத்தை நோக்கும்போது 90% மக்கள் பற்சிதைவு, முரசுகரைதல் ஆகிய இரு பல் வியாதியினாலும் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது. மற்றும் ஒழுங்கற்ற பல்வரிசையும், வாய்ப் புற்றுநோயும் ஒப்பீட்டளவில் எமது பிராந்தியத்தில் அதிகமாக நிகழ்கின்றது.

எமது பிராந்தியத்தில் 75% பல் இழப்பிற்கு பற்சொத்தை வியாதியே காரணமாக இருக்கிறது. சாதாரணமாக எமது வாயில் பெருகிவரும் பற்றீரியாத் தாக்கத்தினால் அமிலத் தன்மையை ஏற்படுத்திச் சிதையக்கூடிய இனிப்புப் பதார்த்தங்கள் வாயில் அதிக அளவில் அதிக நேரத்திற்குத் தேங்கியிருக்கும்போது, பற்களின் மேற்பரப்புகளில் கண்ணிற்குப் புலப்படாமல் நாளாந்தம் தேங்கும் பற்றீரியாப்படலமானது [Plaque] பற்களின் அந்தப்பகுதி மேற்பரப்புகளின் வன்மைத்தன்மையைத் தாக்கிக் குறைந்து துவாரங்களை ஏற்படுத்தி பற்றீரியாக் கிருமிகள் பல்லின் உட்பகுதிகளுக்குச் சென்று பற்சிதைவை ஏற்படுத்துகிறது.

இப்படியான தாக்கத்திற்கு வாய்ப்பான பற்களின் மேற்பரப்பில் 'புளோறைட்டு' என்னும் பதார்த்தம் படிவது நடைபெறச் செய்தால் அந்த மேற்பரப்பில் அமில அரிப்பை எதிர்க்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. எனவே அமிலத் தன்மையை உண்டாக்கும் இனிப்புப் பதார்த்தமான சுத்திகரிக்கப்பட்ட சீனி, சர்க்கரை, கற்கண்டு, பனங்கட்டி, தேன் முதலிய பதார்த்தங்கள் சேர்ந்த உணவை சாப்பிடுவதைக் கட்டுப்படுத்துவதாலும், பற்களில் முக்கியமாக பற்றீரியாப் படலம் தேக்கமடையக்கூடிய இடங்களைக் கவனித்து நாளாந்தம் பிரஷ்மூலம் பயனுள்ள முறையில் நீக்குவதாலும் பற்களின் மேற்பரப்பில் தகுந்த அளவில் புளோறைட்டுப் பிரயோகத்தைச் செய்வதாலும் பற்சொத்தை நோயைக் கட்டுப்படுத்தமுடியும்.

இதற்கு அடுத்த பெருமளவில் முரசு கரையும் நோயினால் எமது பிராந்தியத்தில் பல் இழப்பு ஏற்படுகிறது. இந்நோய் எலும்பின் குழிக்குள் பற்களைத் தாங்கி நிற்கும் மென் இழையத்தைப் பாதிக்கும் நோய் ஆகும்.

பற்களின் மேற்பரப்பு முரசுடன் தொடர்புறும் இடத்தில் ஒதுங்கும் பற்றீரியாப் படலத்தில் நாளாந்தம் ஒதுங்கும் நச்சுக்கழிவினால் நோயின் ஆரம்பத்தில் முரசில் ஏற்படும் ஒவ்வாத் தன்மைக்குரிய அழற்சியே மெதுவாக மறைமுகமாக பல்தாங்கும் நார் இழையத்தினுள் பரவி அவ்விழையத்தைச் சிதைத்துப் பல்தாங்கும் எலும்பிலும் இழப்பை ஏற்படச்செய்து பல்லின் உறுதியைக் குலைக்கின்றது.

பற்களோடு முரசுகள் தொடர்புறும் இடங்களில் ஒதுங்கும் பதார்த்தங்களையும், நாளாந்தம் படியும் பற்றீரியாப் படலத்தையும் நாம் நாளாந்தம் சரியாகப் பிரஷ் பிரயோகித்து அகற்றும் பழக்கத்தின் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

பல்வரிசை ஒழுங்கு தவறி இருக்கும் குறைபாடு சிறுவயதில் அவதானிக்கப்பட்டால் திருத்துவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். வெளித்தள்ளிக் கொண்டு முன்னிற்கும் பற்கள் விபத்தின்போது முறிவடைவதற்கான சாத்தியம் அதிகம்.

எமது பிரதேசத்தில் வாய்ப் புற்றுநோய் சம்பவிப்பதற்கு புகையிலை சேர்த்து வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு உண்ணும் பழக்கமும் அவற்றை வாய்க்குள் அதிக நேரத்திற்கு வைத்திருப்பதுமே பிரதான காரணமாக அறியப்பட்டிருக்கிறது. அதுடன் வாய்ச்சுகாதாரம் பேணாமை, போஷாக்குக் குறைபாடு என்பன இந்த வியாதியை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றது.

ஒவ்வொருவரும் பின்வரும் எளிய பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டும், வருங்கால சமுதாயத்தினரிடையே இதை ஊக்குவிப்பதன்மூலம் தன் முயற்சியில் நலமாக வாழ்வதோடு சமுதாய மட்டத்தில் இந்நோயின் தாக்கத்தின் உக்கிரத்தை வெகுவாகக் குறைக்கலாம்.

★ இனிப்புப் பண்டங்களை உண்பதை மட்டுப்படுத்துதல். முக்கியமாகச் சாப்பாடு நேரம் தவிர்ந்த இடைநேரங்களில் இவற்றை உண்ணுவதைத் தவிர்த்தல்.

★ உரியமுறையில் பற்களையும் முரசுகளையும் புளோறைட்டு சேர்ந்த பற்பசையை உபயோகித்து நாளாந்தம் சுத்தம் செய்தல்.

★ வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்புடன் புகையிலையையும் சேர்த்து உண்ணும், வாய்க்குள் வைத்திருக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளாமல் இருத்தல். இப்பழக்கத்தை முற்றாக நிறுத்திக் கொள்ள முடியாவிடில் அவற்றைக் குறைத்துக் கொள்ளுதலும், உண்டபின் வாயை நன்றாகக் கழுவிக் கொள்ளுதலும்.

★ வருடத்திற்கு இருமுறை வாய்ப் பரிசோதனைக்கு உட்பட்டு நோயின் அறிகுறி தென்பட்டால் உரிய ஆரம்ப சிகிச்சையைச் செய்து கொள்ளல். ★

— டாக்டர் (செல்வி) உ. சிவபாதசுந்தரம் —
[யாழ். பிராந்திய பல்வைத்திய அதிகாரி]

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்
36 ஆவது ஆண்டு
தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்
காலம்: 01-04-1994 முதல் 15-04-1994 வரை

07 — 04 — 1994 வியாழக்கிழமை

ஏழாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி
அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவிகள் ] பாட்டு

7-30 மணி
திரு. சி. தில்லைமணி — பாட்டு
திரு. R, S கேசவமூர்த்தி — வயலின்
செல்வன் K. கஜன் — மிருதங்கம்

8-15—9-30 மணி
திருமதி சக்திதேவி சிவகுமார் — பாட்டு
செல்வன் சு. கோபிதாஸ் — வயலின்
திரு. M. சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. V. தபோதநாயகம் — கடம்

வாழ்த்துவோர்:
மதி ஆபரண மாளிகை
யாழ்ப்பாணம்.
(சி/7656)

G. C. E. A/L - 96
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்:- 09-04-94
சனி காலை 8மணி

பொருளியல் — மகேந்திரன்
கணக்கியல் — SAM
வர்த்தகம் — தேவா
அளவையியல் — சோதி
இந்து நாகரிகம் — அருள்நங்கை
தமிழ் — குழந்தை
அரசியல் — கியூபேட்
புவியியல் — குணராசா
இந்துசமயம் — அருள்நங்கை, கிரிதரன்
வரலாறு — ஸ்ரீதரன்
கிறீஸ்தவ சமயம் — அருட்சகோதரர்

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம்.
(சி-7700)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 1996
கலை, வர்த்தகம்
எமது வழமையான Super Grade ஆசிரியகுழுவினால்

பொருளியல் — திரு. உதயன்
வர்த்தகம் — திரு தேவா
கணக்கியல் — திரு. ராஜன்
அளவையியல் — திரு S S மனோகரன்
தமிழ், இந்துநாகரீகம் ] - திரு என் பாலா
புவியியல் — இக்னேசியஸ்
இந்துசமயம் — திரு. என். பாலா

ஆரம்பம் 09 - 04 - 1994
சனி காலை 7 - 00

விண்ணப்பங்களை முற்கூட்டியே பதிவு செய்யவும்

A/L 96 கணித, விஞ்ஞான வகுப்புகளும் ஆரம்பமாகின்றன
[சி-7489]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

காரை நகர் மணற்காடு

## அருள்மிகு தேவி கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோவில்

## தேர் உற்சவ தினம்

9-4-94 சனிக்கிழமை

அன்று காலை 6-00 மணி முதல் நல்லூர் மனோன் மணி அம்பாளின் சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்மாகித் தொடர்ந்து நண்பகல் 11-00 மணியளவில் சங்காபிஷேகம் நிகழும்.

மங்கள இசை

**K·R** சுந்தரமூர்த்தி குழுவினர்

இணுவில்

அம்பிகை அடியார்கள் சார்பில்
பாலவிநாயகா ரேடர்ஸ்

யாழ். வீதி
கிளிநொச்சி

(30273)

---

# A/L 96 விஞ்ஞானப் பிரிவு

(கணித, உயிரியற் பிரிவு)

**ஆரம்பம்:- 14-04-1994**

(வியாழன் பிற்பகல் 3 மணி)

முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

**NATURE** & **UNIVERSAL**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். | கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி/7483]

---

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## திருமதி கனகம்மா மாணிக்கம்

தோற்றம்: 02-09-1938 | மறைவு: 08-03-1994

8-3-94 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், அரச வடிசாலை கூட்டுத்தாபனம், சங்கானை ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (7-4-94) தேவாலய வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[7190]

---

# BECON

**A/L 96**

கலை, வர்த்தகம்

ஆரம்பம்

**9 – 4 – 94**

(சி/7701)

---

## நவகைடன்ஸ்

ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

**O/L**

பகல் நேர வகுப்பு

விஞ்ஞானம் —
இரா. செல்வவடிவேல்
உட்பட எமது வழமையான ஆசிரியர்குழு

ஆரம்பம்:
**11 – 04 – 1994**
காலை 8 மணி

அனுமதிகளை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-7497)

---

## A/L – 95 மாணவர்களின் கவனத்திற்கு

பிரத்தியேக வகுப்பு மாணவர்கள் அனைவரும்

1994-04-08 (வெள்ளி)
மாலை 4 மணிக்கு
சமுகம் தரவும்

கணக்கியல் ஆசிரியர்

**D. SAM**

76/2, TEMPLE ROAD,
JAFFNA.

[30267]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

# O/L DAY CLASSES

பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம்:
**11 – 04 – 1994**
திங்கள் காலை 8 மணி

(வகுப்புக்கள் 5 நாட்கள் நடைபெறும்)

(சி-7701)

---

## கலை வர்த்தகக் கல்லூரி

# C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

கலை வர்த்தக வகுப்புக்கள்

# G.C.E.(A/L)96

ஆரம்பம்: **09 – 04 – 1994**

காலை 8 மணி

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | திரு. உதயன் |
| கணக்கியல் | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. இரட்ணம் |
| அளவையியல் | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | திரு. வேலா |
| தமிழ் | திரு. தங்கராஜா |
| அரசியல் | திரு. பஞ்சு |
| கிறிஸ்தவ நாகரிகம் | திரு. றொபேட் |

குறிப்புக்கள்:

1. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.
2. மாதாந்த பரீட்சை மூலம் மாணவர் திறமை மதிப்பீடு செய்து வழிநடத்தப்படும்.
3. நேர அட்டவணைகளை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி

(சி-7494)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

# O/L

**DAY CLASSES** 8-30 – 2-00
ஆரம்பம் 11 – 04 – 94
8-30 மணி

**EVENING CLASSES** 3-15 – 6-10
ஆரம்பம் 11 – 04 – 94
3-15 மணி


**SAT, SUN, CLASSES** 8-00 – 2-00
ஆரம்பம் 10 – 04 – 94
8-00 மணி

- மாதாந்த பரீட்சை நடாத்தப்படும்.
- கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும்.
- அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளப் பட வேண்டும்.
- எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

(சி-7494)

---

# வருடாந்த நினைவஞ்சலி



தோற்றம்: 02 – 04 – 1910 | மறைவு: 03 – 04 – 1970

## ஆ. மார்க்கண்டன் B.A, B.Sc, P.G.T

திதி: 07 – 4 – 94

(காலஞ்சென்ற அதிபர், கல்வி வெளியீட்டுத் திணைக்கள, பாடவிதான அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்)

பாராளுஞ் செளமியத்துப் பங்குனியீர் பான்குருசேர்
ஆராத் துவாதசி பின்னாஞ் சதயஞ் – சீராருஞ்
சுன்னைப் பதிவிளங்குந் தூயபுகழ் மார்க்கண்டன்
முன்னைப் பழம்பொருள் சேர் நாள்

என்றும் உங்களை அன்புடன் நினைவுகூரும்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர், நண்பர்கள்.

''விக்னேஸ்வரி பவனம்''
சுன்னாகம் வடக்கு,
சுன்னாகம்.

(7187)

---

# O/L

## DAY CLASS

**ஆரம்பம்: 11 – 04 – 1994**

காலை 8-30 மணி

**NATURE** | **UNIVERSAL**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். | கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

★ பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

(சி-7480)

---

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக

## 'ராசி சில்க்ஸ்'

ஆதரவில்

## மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி – 1994

இடம்:- பரி. யோவான் கல்லூரி மைதானம்

காலம்:- 07-04-1994 பிற்பகல் 7 மணி

சிறப்பு விருந்தினர்:- திரு க. குணராசா [பிரதேச செயலர், யாழ்ப்பாணம்]

பங்குபெறும் அணிகள்;

சென். அன்ரனிஸ் வி.க எதிர் பல்கலைக்கழக வி.க.
அம்பாள் வி.க எதிர் மாவத்தை வி.க.

**பிரவேசம்:- ரூபா 25/-**

[சி/7702]

---

ஆத்திசூடி

## அருள்மிகு சித்திவிநாயகர் ஆலய ஔவையார் விழா

## 3 ஆவது ஆண்டு

(07-04-94)

காலை 9 மணிக்கு — ஸ்நாபன பிசேஷகம் (விசேட மேளக்கச்சேரி. உபயம்:- புஸ்பா அன் கோ.)

12 மணிக்கு—மகேஸ்வர பூசை [ஐங்கரன் அடியார்கள்]

பிற்பகல் 5 மணி முதல் இரவு 7 மணி வரை:-

★ சிறப்புச் சொற்பொழிவுகள்
★ பரிசில்கள் வழங்கல் (போட்டியில் தேர்வு பெற்றோருக்கு)
★ சிறுவர் நிகழ்ச்சி — வில்லுப்பாட்டு
★ வில்லுப்பாட்டு [ஔவையாரின் வரலாறு]
★ இரவு 7-40 மணி — ''கவியரங்கம்''
★ யாழ். இந்து மாணவர்கள் — கொக்குவில் இந்து மாணவர்கள்

தலைமை:- கவிஞர் சா வே: பஞ்சாட்சரம் [ஆசிரியர் யாழ். இந்து]

★ இரவு 8-50 மணி — பட்டி மன்றம்
வழங்குவோர்:- கலை இலக்கிய வட்டத்தினர்
விடயம் — ஔவையாரின் பாடல்களில் செறிந்திருப்பது அறக்கருத்துக்களா? பக்திக் கருத்துக்களா?

★ இரவு 10 மணி:-

## ராஜன்ஸ் குழுவினரின் இன்னிசை கானம்

விளம்பர அன்பளிப்பு:

**புஷ்பா அன் கோ.**
யாழ்ப்பாணம்

[சி-7703]

---

# மரண அறிவித்தல்கள்

## றொபேட் டிலக்சி

செல்வி றொபேட் டிலக்சி காலமானார். இவர் தி றொபேட் [ஆசிரியர், பரி. யோவான் கல்லூரி) பிறேமா அவர்களின் அன்பு மகளாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 7 – 4 – 94 வியாழக்கிழமை மாலை 4 00 மணிக்குப் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
அ. சின்னராசா
(லக்ஸ் மாலா)

48, கடற்கரை வீதி,
பாசையூர்.

(30274)

## முடியப்பு அந்தோனிப்பிள்ளை

(Air Ceylon)

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07-04-94) மாலை 3-30 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலியுடன் இடம்பெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
அசோக்

இல. 7, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்.

(30277)

---

# விக்னா கல்வி நிறுவனம்

இல: 52. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்)

## 96 A/L கலை வர்த்தகம்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் திரு. கலைகாந் | வர்த்தகம் திரு தேவா | கணக்கியல் திரு SK பிரபாகரன் |
| அளவையியல் திரு. விக்கி | தமிழ் திரு. குழந்தை | இந்து நாகரிகம் இந்து சமயம் திரு. [illegible] சுந்தரம்பிள்ளை |
| புவியியல் திரு [illegible] | அரசியல் திரு சீலன் | வரலாறு திரு சிறீதரன் |

**சனி, ஞாயிறு வகுப்புகள்** (வார இறுதி)
ஆரம்பம்: **09-04-1994**
காலை 8 மணி

**மாலை நேர வகுப்புகள்** (கிழமை நாட்களில்)
ஆரம்பம்: **11-04-1994**
மாலை 4 மணி

※ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-7491)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-04-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org